**11.11.2022**

**அ.வ.எண். <u>194/2015</u>**

**<u>பி.சா.1 ராதா அவர்களின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது மகன்கள் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.247/2015ஐ தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். அ.வ.எண்.247/2015 ல் உள்ள சொத்து விவரம் எனக்கு தெரியும். அதன் சர்வே எண் 1194/1பி மற்றும் 1194/2. அதன் விஸ்தீரணம் 7 செண்டு. மேற்படி அ.வ.எண்.247/2015 ஐ எனது மகன்கள் எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவர்களது தகப்பனார் செட்டில்மெண்ட் செய்து வைத்த சொத்தின் மீது இந்த வழக்கின் வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது மகன்கள் மேற்படி வழக்கினை தாக்கல் செய்தார்கள்.

பி.சா.ஆ.1ன் அடிப்படையில் தான் எனது மகன்கள் அ.வ.எண்.247/2015 தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள கூரைவீடு மற்றும் மின்இணைப்பின் விவரங்கள் எனது மகன்கள் அ.வ.எண்.247/2015 ல் சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. அ.வ.எண். 247/2015 வழக்கின் விவரங்களை எனது மகன்களின் வழக்கறிஞரிடம் நான் தான் கூறினேனா என்றால் ஆமாம்.

அந்த வழக்கின் தாவா சொத்திலுள்ள கூரைவீடு மற்றும் மின் இணைப்பினை குறித்து எனது வழக்கறிஞரிடம் நான் கூறினேன். ஆனால் அவர் அதை பிராதுவில் குறிப்பிடவில்லை. தாவா சொத்து நாராயணன் சொத்து என்பதால் எனக்கு உரிமையான சொத்து என்று கூறி எனது மகன்கள் அ.வ.எண்.247/2015 ஐ தாக்கல் செய்திருந்தால் அது தவறு என்றால் அது நான் வாங்கிய சொத்து என்பதால் நான் உரிமையாளர்.

பி.சா.ஆ.2 ன் அடிப்படையில் தான் நான் தாவா சொத்திற்கு உரிமையாளர் என்று கூறுகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தினை 1989ம் வருடம் நான் வாய்மொழியாக கிரையம் வாங்கினேன் என்று இந்த வழக்கில் தாக்கல் செய்த பதிலுரையில் கூறிய விவரங்களை ஏன் அ.வ.எண்.247/2015 ல் கூறவில்லை என்றால் நான் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். அவர் வழக்கில் குறிப்பிட தவறிவிட்டார்.

அ.வ.எண்.194/2015 தாக்கல் செய்யப்பட்ட 8.5.2015 அன்றைய தினமே பி.சா.ஆ.1 ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரிரசீது, மின்கட்டண ரசீது மற்றும் குடிநீர் வரி ரசீதுகளில் நான் வரி செலுத்தியதாக என் பெயரில் வழங்கப்படவில்லை என்றால் என் பெயரில் தான்

வழங்கப்பட்டது. என் பெயரிலுள்ள வரி ரசீதுகளை நான் ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்கள். (சாட்சியிடம் ஆவணங்களை காண்பித்து அதில் எந்த ஆவணம் அவரது பெயரிலுள்ளது என்று காண்பிக்கும்படி வழக்கறிஞர் கேட்டதற்கு சாட்சி ஆவணங்கள் எதையும் பார்த்து பதில் சொல்லவில்லை).

உண்மையிலேயே நான் தாவா சொத்தை அனுபவித்திருந்தால் வரி செலுத்தியதற்கான என் பெயரிலுள்ள ரசீதுகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யாததால் நான் எந்த காலத்திலும் தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.7, 1392 பசலி வருடத்திற்கான பட்டா நாராயணன் பெயரில் தாக்கலாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. (சாட்சியிடம் ஆவணத்தை காண்பித்து பார்த்து கூறுமாறு கேட்டதற்கு சாட்சி ஆவணத்தை பார்க்க மறுத்துவிட்டார்).

இந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வாதி ராஜா தான் தாவா சொத்திற்கு வரி செலுத்தியுள்ளார் என்றால் அவரது சொத்திற்கு அவர் வரி செலுத்தி இருக்கலாம். ஆனால் நான் அனுபவத்தில் இருக்கும் சொத்திற்கு அவர் வரி

செலுத்த முடியாது. வா.சா.ஆ.5 ல் பட்டா என்ற இடத்தில் பட்டா எண் 1099, 1169 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ல் சர்வே எண் 1194/1பி நிலத்திற்கு பட்டா எண் 1169 நாராயணன் பெயரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.8 ல் சர்வே எண் 1194/2 நிலத்திற்கு பட்டா எண் 1099 தேவராஜ் பெயரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேவராஜ் என்பவர் 1ம் வாதியின் தகப்பனார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 பட்டா எண் 1169 மற்றும் 1099 ஆகியவற்றுக்கு செலுத்தப்பட்ட வரி ரசீது என்றால் சரியல்ல. மதுராந்தகம் டவுன் சர்வேயாக மாறுவதற்கு முன்பு தாவா சொத்திற்கான பட்டா நாராயணன் மற்றும் தேவராஜ் பெயரில் இருந்தது என்றால் எனக்கு தெரியாது.

மதுராந்தகம் டவுன் சர்வேயாக மாறுவதற்கு முன்பு தாவா சொத்திற்கான பட்டா என் பெயரில் இல்லை. மதுராந்தகம் டவுன் சர்வேயாக மாறுவதற்கு முன்பு வாதிகளை விசாரணை செய்யாமல் என் பெயரில் பட்டா வழங்கியது தவறு என்றாலும் அதனடிப்படையில் நான் நீதிமன்றத்தில் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றாலும் சரியல்ல. எந்த சொத்திற்கும் பட்டா உரிமைமூலம் ஆகாது என்பதால் அதனடிப்படையில் நான் தாவா சொத்திற்கு உரிமையாளர் என்று கூறுவது தவறு

என்றாலும் எனவே அ.வ.எண்.194/2015 வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாகவேண்டும் என்றாலும் எனது மகன்கள் தாக்கல் செய்த அ.வ.எண்.247/2015 தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

தவறான பட்டாவின் அடிப்படையில் நான் எழுதி வைத்த பி.சா.ஆ.1 ஆவணம் செல்லதக்கதல்ல என்றாலும் அதனடிப்படையில் எனது மகன்களும் தாவா சொத்திற்கு உரிமை கோரமுடியாது என்றாலும் சரியல்ல. வாதியின் அனுமதியின் பேரில் நானும் கிருஷ்ணன் என்பவரும் தாவா சொத்தில் கட்டிய கூரைவீட்டை காலி செய்து வாதிகளிடம் சுவாதீனம் ஒப்படைக்க நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.